**வானவில் கலையகம்**

உங்கள் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகள் எதுவானாலும் சிறந்த முறையில் அதி உயர் தொழில்நுட்பத்தில் வீடியோ படம் பிடித்திடவும் போட்டோ அல்பம் தயாரித்திடவும்

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் Internetமூலம் உங்கள் இல்ல நிகழ்வுகள் , ஆலய நிகழ்வுகள் எதுவானாலும் அதி உயர் தரத்தில் நேரடியாக (LIVE TLECAST) மூலம் பார்த்து மகிழ்ந்திடவும்

**தொடர்பு கொள்ளுங்கள்**

**வானவில் கலையகம்**

இல 330, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்தி)
யாழ்ப்பாணம்
0212229466 , 0772487550
www.vanavilstudio.com



10/=

பக்கங்கள் 06

# எதிரொலி

Ethiroli

குரல் 01 66 சனிக்கிழமை ஜூலை 15 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48


## குற்றச் செயல்கள் அதிகரிப்பு மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

இலங்கையில் குற்றச் செயல்கள் நீடித்து வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குற்றச் செயல்கள் நீடிப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அரசாங்க அதிகாரிகள் குற்றச் செயல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதி தெரிவித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் மனித உரிமை விவகாரங்கள் குறித்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதி பென் எம்மர்சன் இலங்கைக்கு பயணம் செய்திருந்த போது இந்த விடயங்களை கண்டறிந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சர்வதேச தரத்தைக் கொண்டமைந்ததாக இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)



# திடீர் அழைப்பு

அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திடீர் அழைப்பு விடுத்துள்ளார். நாளை மாலை நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் குறித்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்புக்களே நடைபெற்று வந்த நிலையில் நாளைய கூட்டத்துக்கு நாடாளுமன்ற அங்கத்துவம் பெற்றிருக்காத அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலுக்கு தயாராகுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு ரணில் விக்கிரமசிங்க நேற்று அழைப்பு விடுத்திருந்தார். இந் நிலையில் உள்ளூராட்சித் தேர்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்படலாம் என தெரியவருகின்றது. (எ- 09)

## தேங்காய் விலை சரிவு



யாழ். மாவட்டத்தில் தேங்காயின் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ். குடாநாட்டுக்கு பெருமளவு தேங்காய்கள் வெளிமாவட்டங்களில் இருந்து இறக்குமதியாகின்றமையே விலையின் வீழ்ச்சிக்கு காரணமெனக் கூறப்படுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 70 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட தேங்காய் 55 ரூபா முதல் 60 ரூபாவாகவும், 60 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட நடுத்தரத் தேங்காய் 45 ரூபாவாகவும், 40 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட சிறிய தேங்காய் 30 ரூபாவாகவும் விலை குறைந்துள்ளன. (அ)

காடழிப்பு, அத்துமீறிய குடியேற்றங்களை எதிர்த்து

# முல்லைத்தீவில் நாளை இளையோர் களத்தில்!

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் காடழிப்பினையும், திட்டமிட்ட அத்துமீறிய குடியேற்றங்களையும் நிறுத்தக் கோரி, முல்லைத்தீவில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கூழாமுறிப்பு எனும் பகுதியில் உள்ள சுமார் 177 ஏக்கர் காட்டினை அழித்து குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட உள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலய முன்றலில் இருந்து நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் கூழா முறிப்பு நோக்கி இந்த ஆர்ப்பாட்ட பேரணி செல்லவுள்ளது.

குறித்த போராட்டத்துக்கு அணிதிரளுமாறு சமூக வலைத்தளங்கள் ஊடாக சட்டவிரோத குடியேற்றங்களை எதிர்க்கும் இளைஞர் அணி எனும் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.(அ)

## அமைச்சருக்கு எச்சரிக்கை !



முல்லைத்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி சட்டவிரோதத் தொழில்களில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களை இரு வாரங்களுக்குள் கட்டுப்படுத்த வேண்டும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கடற்றொழில் அமைச்சருக்கு கால அவகாசம் வழங்கியுள்ளார். அத்துமீறல்கள் கட்டுப்படுத்தப்படாவிட்டால், பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களை ஒன்று திரட்டி கொழும்பில் உள்ள கடற்றொழில் அமைச்சின் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்படும்

06

## முறைப்பாடு ஏற்க மறுப்பு

மொழியுரிமை மீறல் தொடர்பான முறைப்பாட்டினை பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ள முடியாது என கோப்பாய் பொலிஸ் நிலையப் பொலிஸார் முறைப்பாட்டாளரை திருப்பி அனுப்பி உள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. திருநெல்வேலிச் சந்தியில் நேற்றுக் கடமையில் இருந்த கோப்பாய் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியால் விதிமுறை மீறல் தொடர்பில் சிங்கள மொழியில் எழுதி கொடுத்தமை தனக்கு விளங்கவில்லை. இதனால் தனது மொழி உரிமை

06

வித்தியா வழக்கில்

# பொலிஸ் உயரதிகாரிகள் இருவர் கைது?

புங்குடுத்தீவு மாணவி வித்தியா கொலைச் சம்பவத்தோடு தொடர்பு பட்டதான குற்றச்சாட்டில் பொலிஸ் உயர் அதிகாரிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. நேற்று மாலை விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்த இருவரும் இன்று நண்பகல் வரை விடுவிக்கப்படாத நிலையில் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. யாழ்.மாவட்ட பொறுப்பதிகாரியாக செயற்பட்ட சிரேஷ்ட பிரதி பொலிஸ் அதிகாரி ஒருவரும் அவரின் கீழ் பணியாற்றிய உதவிப் பொலிஸ் அதிகாரி ஒருவருமே வித்தியா கொலை வழக்குத் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். குற்ற விசாரணை திணைக்கள விசாரணையை அடிப்படையாக கொண்டு சட்டமா அதிபர்

06

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இன்று பட்டமளிப்பு விழா




முன்பள்ளி ஆசிரியர் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 446 ஆசிரியர்களுக்கு பட்டமளிக்கும் நிகழ்வு யாழ்ப்பாண பல்கலைக் கழக கைலாசபதி கலை

06

## அடுத்த ஜனாதிபதி கோத்தாவே

2020ஆம் ஆண்டில் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகின்றார் என்ற பயத்தின் காரணமாக அவரைக் கைது செய்து சிறையிலடைப்பதற்கு தேசிய அரசு திட்டமிட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். மஹிந்த அணிக்கான செல்வாக்கு நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருவதால் அந்தச் செல்வாக்கை எப்படியாவது குறைத்து விடுவதற்கு தேசிய அரசு திட்டமிடுகின்றது. அந்தச் செல்வாக்குக்குப் பயந்துதான் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திப்போட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல்களுக்கும் அதே கதிதான். கோத்தபாய ராஜ பக்ஷ 2020 ஜனாதிபதித் தேர்தலில்போட்டியிடுவாரோ

06

## மாவிலாற்றில் மாணவர்கள் தோணி கவிழ்ந்து பலி!

மாவிலாற்றில் தோணி கவிழ்ந்ததில் மாணவர்கள் இருவர் பரிதாபமாக இன்று பலியாகினர்.கெக்குனு கொல்ல-அரக்கியால பகுதியைச் சேர்ந்த எம்.என். எம்.அப்துல்லாஹ் (11 வயது) மற்றும் எம்.எச். எம்.அப்துல்லாஹ் (18 வயது) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குறித்த அமாணவர்கள், மூதூரில் திருமண வீடொன்றுக்காக வந்திருந்தனர். இதன்போது அவர்கள் மாவிலாற்றைப் பார்வையிடச் சென்றனர். அங்கே அவர்கள் தோணியில் பயணித்தபோது திடீரென அது கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

உயிரிழந்த இரு மாணவர்களின் சடலங்களும், சேருநுவர பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (அ)


தமிழர் தாயகத்தின் முதல் மாலைத் தினசரி

# அம்பாறையில் 86 புத்தர் சிலைகள்



அம்பாறை மாவட்டத்தில் பாரம்பரியமாக தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்துவரும் பூர்வீக நிலங்களில் 86 இடங்கள் புத்தர் சிலைகளை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் 5 இடங்களும், திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் 36 இடங்களும், இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவில் 13 இடங்களும், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் 9 இடங்களும், அக்கரைப்பற்று பிரதேசத்தில் 6 இடங்களும், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் 11 இடங்களும், சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 4 இடங்களும், கல்முனை பிரதேசத்தில் 2 இடங்களுமாக முஸ்லிம், தமிழர்களுக்குரிய 86 இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலத்தில் 246 இடங்களை அடையாளப்படுத்தி இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டதாகவும் அதனை மைத்திரி அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# ஓடும் புகையிரதத்திலிருந்து விழுந்து ஒருவர் மரணம்



கொழும்பிலிருந்து யாழ் நோக்கி நேற்று வெள்ளிக்கிழமை 11.50 மணிக்குப் புறப்பட்ட புகையிரதம் மாலை மாங்குளத்தை அடைந்து அங்கிருந்து புறப்பட்டபோது மாங்குளத்திற்கும் முறிகண்டிக்கும் இடையில் தவறுதலாக பயணி ஒருவர் விழுந்து இறந்துள்ளார்.

குறித்த புகையிரதம் கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டு மாங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து குறித்த நபரை தேடும் பணியில் மாங்குளம் பொலிஸ் குழு ஒன்று ஈடுபட்டது. இன்று காலை முறிகண்டிக்கும் கொக்காவில் பகுதிக்கும் இடையில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (உ)

## கத்திக்குத்து ஒருவர் பலி

மட்டக்களப்பு, வாகரையில் கத்திக்குத்துக்கு இலக்காகி இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளாரென, வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை, புளியம்கந்தலடி பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 24 வயதுடைய கந்தையா விக்கினேஸ்வரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று நள்ளிரவு 12 மணியளவில், உறங்கிக் கொண்டிருந்தபோது வீட்டுக்கதவைத் தட்டும் சத்தம் கேட்டமையால், கதவை குறித்த நபர் திறந்த போது, அவர் மீது ஒருவர் கத்தியால் பலமாகக் குத்திவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

இதனையடுத்து, தாக்குதலில் படுகாயமடைந்தவர், சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (உ)

## பொதுபலசேனா குற்றச்சாட்டு



"அரச ஊடகங்கள் இஸ்லாமிய ஆதிக்கத்துக்கு ஆட்பட்டிருந்தன என்பதை ஏற்றுக்கொண்ட அமைச்சர் மங்கள சமரவீர பாராட்டுக்குரியவர். அதேசமயத்தில் அவர் அரச ஊடகங்களைப் பயன்படுத்திக்கொண்டு மகாநாயக்க தேரர்களை பழிவாங்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்" என பொதுபல சேனா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலாந்த விதானகே குற்றம் சாட்டினார்.

ராஜகிரிய சத்தர்மாராம விகாரையில் இடம்பெற்ற பொதுபல சேனா அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நீண்ட நாட்களாகவே அரச ஊடகங்கள் இஸ்லாமிய ஆக்கிரமிப்புக்குள் ஆட்பட்டிருந்தன என பொதுபல சேனா அமைப்பு தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தது.

அதனை கடந்த மகிந்த ராஜபக்ச அரசாங்கம் சிறிதும் பொருட்படுத்தவில்லை. முன்னாள் ஊடகத்துறை அமைச்சருக்கு இது குறித்து நாங்கள் அறிவித்திருந்த போதும் அவர் அதனைக் கருத்திற்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## போதைப்பொருளுடன் இலங்கையர் கைது



குவைத்தில் போக்குவரத்து மீறல்களில் ஈடுபட்ட இலங்கையர்கள் உட்பட 68 பேர் அந்நாட்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது பொலிஸாரின் காரைக் கண்ட இலங்கைத் தம்பதியர் அங்கிருந்து தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர். அவர்களைக் கைது செய்து விசாரித்தபோது போதைப்பொருள் வைத்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## டிலானுக்கு துமிந்த பதில்

ராஜாங்க அமைச்சரும் சுதந்திரக் கட்சியின் பேச்சாளருமான டிலான் பெரேரா அண்மையில் சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்கு கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க பதிலளித்துள்ளார்.

அமைச்சர் டிலான் பெரேரா அண்மையில் துமிந்த திஸாநாயக்கவின் கருத்துக்கள் சிறுபிள்ளைத்தனமானவை என கூறியிருந்தார்.

கட்சியின் பொதுச் செயலாளர் ஒருவரை பகிரங்கமாக இவ்வாறு விமர்சனம் செய்வதன் மூலம் டிலான் பெரேரா தனது அரசியல் அனுபவ முதிர்ச்சியின்மையை வெளிப்படுத்தியிருப்பதாக துமிந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டியுள்ளார் எனவும் இதனால் எவருக்கும் எந்தவொரு கருத்தையும் வெளியிட அனுமதியுண்டு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். விமர்சனங்கள் இழிவுபடுத்தல்களின் மூலம் தமது அரசியல் பயணத்தை எவராலும் தடுக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## படகுகளை விடுவிக்க உத்தரவு

இலங்கை வசம் உள்ள தமிழக மீனவர்களின் 42 படகுகளை விடுவிக்க யாழ். நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மனிதாபிமான அடிப்படையிலேயே மீனவர்களின் படகுகளை விடுவிப்பதாகவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. விடுவிக்கப்படவுள்ள 42 படகுகளும் 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 முதல் நவம்பர் 10ஆம் திகதி வரை சிறைபிடிக்கப்பட்டவை ஆகும். இந்த படகுகள் அனைத்தும் வரும் 17 ஆம் திகதி இந்தியாவிடம் ஒப்படைக்கப்படும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இவை நாகை, ராமநாதபுரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுக்குச் சொந்தமான படகுகள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## எண்ணிக்கை உயரும்

"நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னர் நுவரெலியா மாவட்டத்தில் தற்போது இருக்கின்ற 5 பிரதேச சபைகளின் எண்ணிக்கை 10ஆக உயர்த்தப்பட வேண்டும் என்ற எமது உறுதியான நிலைப்பாட்டை அரசாங்கத்துக்குத் தெரிவித்து விட்டோம். அதன்படி இது நடைபெறும்" என, ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (உ)

## போராட்டம் வெடிக்கும் எச்சரிக்கை

ஹம்பாந்தோட்டை எண்ணெய்த் தாங்கிகள் விற்பனை செய்யப்பட்டால் தொழிற்சங்கப் போராட்டம் வெடிக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெற்றோலிய வள தொழிற்சங்க ஒன்றியம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. எதிர்வரும் நாட்களில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு விற்பனை செய்ய அரசாங்கம் உடன்படிக்கையில் கைச்சாத்திட உள்ளதாக தொழிற்சங்க ஒன்றியத்தின் அழைப்பாளர் டி.ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார். எண்ணெய்த் தாங்கிகளை சீனாவுக்கு விற்பனை செய்ய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் அன்று முதல் போராட்டம் வெடிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## கதிர்காமம் செல்ல காட்டுப் பாதை திறப்பு

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற கதிர்காமக்கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல்விழா உற்சவத்துக்கு குமண வனத்தினூடாக செல்கின்ற பக்தர்களுக்கான காட்டுப்பாதை இன்று அதிகாலை திறக்கப்பட்டுள்ளது.

உகந்தமலை முருகனாலயத்தில் அதிகாலை 4 மணிக்கு விசேட பூஜைகள் இடம்பெற்றன. குறித்த பூஜையில் அம்பாறை மற்றும் மொனராகலை அரசாங்க அதிபர்களோடு பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

பூஜைகள் நிறைவுற்றதன் பின்னர் அரசாங்க அதிபர் முன்னிலையில் அதிகாலை 5 மணிக்கு காட்டுப்பாதை திறக்கபட்டுள்ளது. இன்று திறக்கப்படும் காட்டுப்பாதை ஒகஸ்ட் மாதம் 02ஆம் திகதி மீண்டும் மூடப்படும். (உ)

## மீளாய்வுக் கூட்டம்



வடமாகாண சமுதாய சார் சீர்திருத்த திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டின் அரையாண்டுக்கான முன்னேற்றக் கூட்டம் கிளிநொச்சியில் இன்று இடம்பெற்றது. கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9 மணி முதல் நண்பகல் வரை இடம்பெற்ற இந்த மீளாய்வுக் கூட்டத்தில் வடமாகாணத்தில் உள்ள 9 நீதிவான் நீதிமன்றங்களில் இயங்கிவரும் சமுதாய சீர்திருத்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் வேலைப் பரிசோதகர்கள் கலந்துகொண்டிருந்தனர். (உ-04)


மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்


முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848




# பிரிட்டனில் ஆளில்லாப் பொலிஸ்

பிரிட்டனில் டிரோன் எனப்படும் ஆளில்லா விமானப் பொலிஸ் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இது காணாமல்போனவர்கள், சாலைவிபத்துகள் உள்ளிட்ட பெரிய குற்றச்சம்பவங்களை புலனாய்வு செய்வதற்கு உதவும் என்று பொலிஸார் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.
இதன் மூலம் பிரிட்டன் பொலிஸார் குற்றங்களைக் கட்டுப்படுத்துவது இலகுவாகும் என்பதோடு பெருமளவிலான பணத்தையும் மீதப்படுத்த முடியும்.
மேலும் இந்த ஆளில்லா விமானங்கள் 24 மணி நேரமும் செயற்படும் என்றும் ஹெலிகொப்டர் செய்யும் அனைத்துப் பணிகளை இதுவும் செய்யும் என்றும் அதிலுள்ள நுட்பமான கமெராக்கள் தெளிவாகக் காட்சிகளைப் படம்பிடிக்கக் கூடியவை என்றும் கூறப்படுகின்றது. (இ)



# கமலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

விஜய் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பாகி வரும் பிக் பாஸ் நிகழ்ச்சியை நடிகர் கமலஹாசன் தொகுத்து வழங்கி வருகிறார்.
இந்த நிகழ்ச்சி தமிழர் பாரம்பரியம் மற்றும் தமிழ்ச் சமூகத்தை கெடுக்கும் வகையில் உள்ளது என்றும், பிக் பாஸ் நிகழ்ச்சியை ரத்துச் செய்யுமாறும் இந்து மக்கள் கட்சியினர் சென்னைப் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தனர்.
இதனைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக்கிழமை இந்து மக்கள் கட்சியினர் ஆழ்வார்ப்பேட்டையிலுள்ள கமலின் வீடு அமைந்துள்ள பகுதியில் பிக் பாஸ் நிகழ்ச்சியை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ)

# மாணவியை வன்புணர்ந்த குற்றவாளிக்குச் சிகிச்சை

ஜேர்மனி நாட்டில் உள்ள பல்கலைக்கழக கழிவறையில் மாணவி ஒருவரை வன்புணர்ந்த நபருக்கு சிகிச்சை அளிக்குமாறு அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.
ஜேர்மனியில் உள்ள முனிச் பல்கலைக்கழகத்தில் சபைன் என்ற இளம்பெண் படித்து வந்துள்ளார்.
இந்த நிலையில், கடந்த ஜனவரி மாதம் பல்கலைக்கழக கழிவறையில் 26 வயதான நபர் திடீரென நுழைந்துள்ளார்.
பின்னர், தனியாக இருந்த சபைன்னை கொடூரமாக வன்புணர்ந்துவிட்டு அங்கிருந்து தப்பியுள்ளார்.
இந்தச்சம்பவம் நிகழ்ந்து இரண்டு தினங்களுக்கு பின்னர் மீண்டும் அதே நபர் கழிவறைக்கு சென்று மற்றொரு மாணவியையும் வன்புணர முயன்றுள்ளார்.
ஆனால், துணிச்சலாகச் செயற்பட்ட அந்த மாணவி, அந்த நபரைக் கீழே தள்ளிவிட்டுத் தப்பியுள்ளார்.
இவ்விரு குற்றங்களையும் செய்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
அவர் மீதான குற்றங்கள் அனைத்தும் ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டன.
இந்நிலையில், குற்றவாளியை மருத்துவ பரிசோதனை செய்தபோது அவர் பல ஆண்டுகளாக மனநல ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.இதனால் அவரை 6 வருடங்களுக்கு மனநல மருத்துவமனையில் வைத்து சிகிச்சை அளிக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (இ)

# 20 ஆண்டுகளுக்குப் பின்னர் ஹெய்ட்டியில் இராணுவம்

20 ஆண்டுகளாக இராணுவமே இன்றி செயற்பட்டு வந்த ஹெய்ட்டி நாடு முதன் முறையாக சொந்தமாக இராணுவத்தை உருவாக்கத்திட்டமிட்டுள்ளது.
எல்லைப் பாதுகாப்பு, இயற்கைப் பேரிடர் உள்ளிட்ட விடயங்களை எதிர்கொள்ளும் பொருட்டே, 500 வீரர்கள் கொண்ட இராணுவத்தை உருவாக்க கரீபியன் கடல் பகுதியில் அமைந்திருக்கும் ஹெய்ட்டி முடிவெடுத்துள்ளது.
இதன்பொருட்டு 18 முதல் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களும், இளம் பெண்களும் இராணுவத்தில் சேர்க்கப்படுவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
இந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் தனது படைகளை ஹெய்ட்டியில் இருந்து திரும்பப் பெற்றுக்கொள்வதாக ஏப்ரல் மாதம் ஐ.நா அறிவித்ததை அடுத்தே, இராணுவத்தை உருவாக்கும் முயற்சியை ஹெய்ட்டி அரசு தொடங்கியுள்ளது.(இ)

# மங்கோலிய ஜனாதிபதியாக மல்யுத்தச் சம்பியன்



மங்கோலிய நாட்டு மக்கள் தங்களின் புதிய ஜனாதிபதியாக முன்னாள் மல்யுத்த வீரர் ஒருவரைத் தேர்தலில் வெற்றிபெறச்செய்துள்ளனர்.
மங்கோலியாவின் ஜனநாயகக் கட்சி சார்பில் அந்த நாட்டின் புதிய ஜனாதிபதியாக கடந்த 11 ஆம் திகதி படுல்ல ஹல்ட்மா பதவியேற்றுள்ளார்.
படுல்ல ஹல்ட்மா மங்கோலியாவின் சிறந்த மல்யுத்தக் கலைஞர்களில் ஒருவரும் சாம்போ வகைத் தற்காப்புக் கலையில் உலகச் சம்பியன் பட்டம் பெற்றவருமாவார். கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற தேர்தில் மங்கோலியா மக்கள் கட்சியின் வேட்பாளரை தோற்கடித்தே மங்கோலியாவின் புதிய ஜனாதிபதியாக படுல்ல ஹல்ட்மா தெரிவாகியுள்ளார்.(இ)

# இந்தோனேசியா சோம்பேறி நாடு

அமெரிக்காவின் ஸ்மார்ட்போன் டேட்டா நிறுவனம் உலகளவில் மக்கள் ஒரு நாளைக்கு எவ்வளவு தூரம் நடக்கிறார்கள் என்று நடத்திய ஆய்வின் மூலம் அதிக சோம்பேறிகள் மற்றும் சுறுசுறுப்பான மக்கள் வாழும் நாடுகள்எவை எனக்கண்டறியப்பட்டுள்ளது.
46 நாடுகளைச் சேர்ந்த மக்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.
இந்த ஆய்வானது உலகளவில் 700,000 பேரிடம் எடுக்கப்பட்டது. இதன் முடிவில் சுறுசுறுப்பான மக்கள் வாழும் நாடாக கொங்காங் அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்நாட்டு மக்கள் சராசரியாக ஒரு நாளைக்கு 6,880 அடிகள் நடக்கிறார்கள் என தெரியவந்துள்ளது.
இந்த பட்டியலில் சோம்பேறிகள் அதிகம் வாழும் நாடாக இந்தோனேசியா அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு வாழும் மக்கள் ஒரு நாளைக்கு 3,513 அடிகள் மட்டுமே நடக்கிறார்கள்.
இந்த பட்டியலில் பிரிட்டன் 12ஆவது இடத்தில் உள்ளது. 5444 அடிகள் அங்கு வாழும் மக்கள் நடக்கிறார்கள்.(இ)

# இரட்டை இலைக்கு லஞ்சம்: முதல் குற்றப்பத்திரிகை



இரட்டை இலைச் சின்னத்தைப் பெறுவதற்காக தேர்தல் ஆணையகத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில், முதல் குற்றப் பத்திரிகை நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது. எனினும் அதில் தினகரனின் பெயர் இடம்பெறவில்லை. ஆயினும் அடுத்து தாக்கல் செய்யப்படவுள்ள குற்றப் பத்திரிகையில் டி.டி.வி.தினகரன் பெயர் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இரட்டை இலைச் சின்னத்தைப் பெறுவதற்காக தேர்தல் ஆணையகத்துக்கு 50 கோடி ரூபா லஞ்சம் கொடுக்க முயன்றதாக குற்றம்சாட்டப்பட்ட வழக்கில் அ.தி.மு.க. (அம்மா) அணியின் துணை பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன், அவரது நண்பர் மல்லிகார்ஜுனா, இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் ஆகியோர் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டனர்.
தினகரன், மல்லிகார்ஜுனா ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால் சுகேஷ் சந்திரசேகருக்கு பிணை வாங்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. இந்த நிலையில், இந்த வழக்கில் 5 குற்றவாளிகளில் முதல் குற்றவாளியான சுகேஷ் சந்திரசேகர் மீதான குற்றப்பத்திரிகை மட்டும் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.ஏனையோர் மீதான குற்றப் பத்திரிகைகள் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ)

# ஒப்புதல்

அமெரிக்காவில் பென்சில்வேனியாவில் 4 பேரைக் கொலை செய்து, தனக்குச் சொந்தமான பண்ணையில் புதைத்து விட்டதாக காஸ்மோ டினார்டோ என்ற 20 வயது இளைஞர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த வழக்கில் தனக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது என்ற நிபந்தனையின்பேரில், அவர் தன் மீதான குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டுள்ளார் என அவரது சட்டத்தரணி தெரிவித்தார். (இ)

# பரபரப்பு

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா தலையிட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு இன்னும் முடிவுக்கு வந்தபாடில்லை. இந்த நிலையில், "ரஷ்ய அதிபர் புடினை வோஷிங்டன் வெள்ளை மாளிகைக்கு வருமாறு அழைப்பு விடுப்பேன், ஆனால் இப்போது அல்ல, சரியான தருணத்தில் அழைப்பு விடுப்பேன்" என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கூறி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார். (இ)

# பஸ் விபத்தில் 9 பேர் பலி

தமிழகத்தின் திருப்பூரிலிருந்து கும்பகோணம் சென்ற அரசு பஸ்ஸூம் , லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதி பயங்கரவிபத்து ஏற்பட்டது. இதில் அரசு பஸ் ஓட்டுநர் உட்பட 9 பேர் பலியானதாக முதற்கட்டச் செய்திகள் தெரிவிக்கின்றன.
அரசு பஸ்ஸில் பயணம் செய்த 60 பேரில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.
காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ)

# நாடாளுமன்றில் மோதிய பெண் எம்.பி.க்கள்



தாய்வான் நாட்டு நாடாளுமன்றத்தில் பெண் எம்பிக்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.
தாய்வான் நாட்டு நாடாளுமன்றத்தில் நாட்டில் மேற்கொள்ளப்படும் அடிப்படைக் கட்டமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான விவாதம் நடைபெற்றது.
அப்போது ஆளுங்கட்சி பெண் எம்.பி சிசியூ-யிங்குக்கும், எதிர்கட்சி பெண் எம்.பியான சூ-ஷூ-ஹீவாவுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த வாக்குவாதம் முற்றி அது கைகலப்பாக மாறியது.
திடீரென்று எம்.பி ச்சியூ-யீ-யிங், தன்னோடு வாக்குவாதத்தில் ஈடுபட்ட சூ-ஷூ-ஹீவாவை அறைந்தார். இதனால் அவரும் பதிலுக்குத் தாக்கியதால், நாடாளுமன்றத்தில் பரபரப்பு ஏற்பட்டது.
இதைக் கண்ட சபாநாயகர் எச்சரிக்கை விடுத்தும், அவர்கள் இருவரும் சமரசம் ஆகவில்லை. அதன் பின் அங்கிருந்த எம்.பிக்கள் சிலர் இருவரையும் பிரித்தனர். இது தொடர்பான காட்சிகள் அனைத்தும் நேரலையில் ஒளிபரப்பாகியமை குறிப்பிடத்தக்கது. (இ)

# அர்ஜுன அதிரடி



“2011ஆம் ஆண்டு நடந்த உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் இலங்கை அணி இந்தியாவிடம் தோல்வியடைந்தது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்” என முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்கா வலியுறுத்தியுள்ளார்.

மும்பை வான்கடே மைதானத்தில் 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் இந்தியா - இலங்கை அணிகள் மோதின. முதலில் ஆடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 274 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் ஆடிய இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன்பின்னர் இலங்கை அணியின் களத்தடுப்பு மற்றும் பந்துவீச்சில் தொய்வு ஏற்பட்டது. இதனால், இந்திய அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில், அர்ஜுன ரணதுங்கா தனது பேஸ்புக் பக்கத்தில் ஒரு வீடியோவைப் பதிவு செய்துள்ளார். அந்த வீடியோவில்,

“வான்கடே மைதானத்தில் நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோற்றதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். நானும் இந்தியாவில் வர்ணனையாளராக இருந்தேன். நாம் தோல்வியடைந்தபோது வேதனைப்பட்டேன். அத்துடன் எனக்கு சந்தேகமும் எழுந்தது. போட்டியில் என்ன நடந்தது என்பதை நாம் விசாரணை நடத்த வேண்டும்.

எல்லாவற்றையும் இப்போது என்னால் வெளியிட முடியாது. ஆனால் ஒருநாள் வெளியிடுவேன். எனவே விசாரணை நடத்தப்பட வேண்டும். வீரர்கள் தங்கள் சுத்தமான ஆடைகளால் உள்ளே இருக்கும் அழுக்கை மறைக்க முடியாது” என யாரையும் குறிப்பிடாமல் பேசினார்.

அவரது இந்த பேஸ்புக் வீடியோ இலங்கைக் கிரிக்கெட் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)





# இந்தியர்கள் பதிலடி

அர்ஜுன ரணதுங்காவின் வீடியோவுக்கு இந்திய அணி வீரர்கள் பதில் கொடுத்துள்ளனர்.

இந்திய வீரர் காம்பீர், ரணதுங்கா போன்ற சிறந்த வீரர்கள் இது போன்று பேசுவது ஆச்சரியம் அளிக்கும் வகையில் உள்ளது. இதைப் பற்றிப் பேசுவதற்கு முன்னர், அதற்கான ஆதாரங்களை வைத்துக்கொண்டு பேசுவது நல்லது” என்று கூறியுள்ளார்.

மேலும் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான நெக்ரா, “ரணதுங்க இப்படிக் கூறியிருப்பதை நான் விமர்சிக்க விரும்பவில்லை. இது போன்ற கருத்துக்களுக்கு முடிவுகள் கிடையாது.

1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின் வெற்றி குறித்து இலங்கை அணிக்கு எதிராக இதே கேள்வியை என்னாலும் கேட்க முடியும். இது ஒரு சுத்த பைத்தியக்காரத்தனமான பேச்சு” என்று கூறியுள்ளார். (ஐ)




# விம்பிள்டன் பட்டம் வெல்ல பெடரர்–சிலிச் நாளை மோதல்

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் இறுதியாட்டத்துக்கு சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் மற்றும் குரோஷியாவின் சிலிச் ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர்.

நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியாட்டம் ஒன்றில் குரோஷியாவின் மரின் சிலிச், 6:7, 6:4, 7:6, 7:5 என்ற புள்ளிக் கணக்கில் அமெரிக்காவின் சாம் குயரியை வீழ்த்தி முதல் முறையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் 7 தடவைகள் சம்பியனான ரோஜர் பெடரர் (சுவிட்ஸர்லாந்து) 7:6, 7:6, 6:4 என்ற புள்ளிக் கணக்கில் செக்குடியரசின் தோமஸ் பெர்டிச்சை வீழ்த்தி இறுதிச் சுற்றை எட்டினார்.

அவர் விம்பிள்டனில் இறுதிப் போட்டிக்குள் அடியெடுத்து வைத்திருப்பது இது 11ஆவது முறையாகும்.

5ஆம் நிலை வீரரான பெடரர், நாளை நடைபெறும் இறுதியாட்டத்தில் தரவரிசையில் 6ஆவது இடத்தில் உள்ள மரின் சிலிச்சை எதிர்கொள்கிறார். (ஐ)



# நல்லதொரு தொடக்கம்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி, 309 ஓட்டங்களைக் குவித்து வலுவான நிலையை எட்டியுள்ளது.

தென்னாபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாட்டிங்காமில் நேற்றுத் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 309 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில், எல்கர் (6), குன் (34), டு பிளெசிஸ் (19) பவுமா (20) ஆகியோர் ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்துச் செல்ல, அம்லா (78), கொக் (68) ஆகியோர் சிறப்பாக ஆடி அரைச்சதம் கடந்தனர்.

பிளான்டர் (54), மொரிஸ் (23) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இங்கிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், பிராட் 3 விக்கெட்டுகளையும், ஸ்ரோக் 2 விக்கெட்டுகளையும், அன்டர்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று ஆட்டத்தின் இரண்டாவது நாள் ஆகும்.

# ஜூலியின் சோகக்கதையை கிண்டல் செய்த ஆர்த்தி

பிக்பாஸ் நிகழ்ச்சியில் அதிகம் விமர்சிக்கப்பட்டவர் ஜூலிதான். ஆரம்பத்திலிருந்தே பலமுறை சக போட்டியாளர்களால் கிண்டலுக்குள்ளானார்.

ஜூலிக்கும், ஆர்த்திக்கும் இடையே சமீபத்தில் கூட சண்டை வந்து போனது. இந்நிலையில் நேற்று ஓவியா ஜூலியின் குடும்பத்தை பற்றி விசாரித்தார்.

அப்போது ஜூலி, தான் கடந்து வந்த பாதை பற்றிக் கூறினார். அப்போது ஜூலி மருத்துவராக ஆசைப்பட்டாராம். ஆனால் வசதியில்லாததால் செவிலியராக மாறியதாகக் கூறினார்.



மேலும் வெளிநாட்டுக்குச் சென்று வேலை பார்க்க விருப்பப்பட்டு ஒரு ஏஜெண்ட்டிடம் 3 இலட்சம் கொடுத்து ஏமாந்து போய் கதறி அழுதாராம்.

இதை அறிந்த அவரது அப்பா, பணம் போனால் பரவாயில்லை திரும்பி வா என்று ஆறுதல் கூறினாராம். அடுத்த நாளே ஒரு மருத்துவமனையில் பணிக்கு சேர்ந்து விட்டேன் என கூறிக்கொண்டிருந்தார்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஆர்த்தி அவருக்கு பின்னால் நின்று கொண்டு கமராவைப் பார்த்து, ஜூலி ரீல் சுற்றுகிறார் என்பது போல் கையசைத்து கிண்டல் செய்தார். (ஒ)


# ‘பேஸ்புக்’ பாவனையில் இந்தியா முதலிடம்

உலகளவில் பேஸ்புக்கை அதிகம் பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளது.

இந்தியாவில் மாத்திரம் சுமார் 24.1 கோடி பேர் பேஸ்புக்கைப் பயன்படுத்துகின்றனர், இதுவரையிலும் அமெரிக்காவே முதலிடத்தில் இருந்து வந்தது.

இந்தியாவைப் பொறுத்தவரை கடந்த ஆறு மாதங்களில் மாத்திரம் பேஸ்புக் பயனாளர்களின் எண்ணிக்கை 5 கோடி அதிகரித்துள்ளது.

எனினும் இந்தியாவின் மக்கள் தொகையோடு ஒப்பிடும்போது பேஸ்புக் பயன்படுத்தும் நபர்களின் எண்ணிக்கை குறைவுதான் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)





# ஐக்கிய நாடுகள் சபையில் திமிறும் ‘ஜல்லிக்கட்டு’

சென்னை மெரீனாவில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய ஜல்லிக்கட்டுப் போராட்டம், ‘ஜல்லிக்கட்டு’ என்ற பெயரில் படமாகத் தயாராகியிருக்கிறது. இதன் முன்னோட்டம் ஐக்கிய நாடு சபையில் வெளியிடப்படவுள்ளது.

சந்தோஷ் இயக்கும் இந்தப் படத்தை அஸ்மிதா புரொடக்ஷன் சார்பில் சிங்கப்பூரைச் சேர்ந்த நிருபமா, குருசரவணன் ஆகியோருடன். வோஷிங்டனைச் சேர்ந்த ஜெயபால் இணைந்து தயாரித்திருக்கிறார். சு.கா.பூபதி ஒளிப்பதிவு செய்கிறார். ரமேஷ் விநாயகம் இசை அமைக்கிறார். காசி விஸ்வநாதன் படத்தொகுப்பு செய்கிறார். ‘ஜல்லிக்கட்டு’ படத்தின் முதல் போஸ்டர் வோஷிங்டனில் வெளியிடப்பட்டது.

படத்தின் முன்னோட்டம் நைரோபியில் நடக்கும் ஐக்கிய நாடுகள் இளைஞர் அணி மாநாட்டில் வெளியிடப்படவுள்ளது. இதில் இயக்குநர் சந்தோஷ், தயாரிப்பாளர் அனுபமா ஆகியோர் பங்கேற்கவுள்ளார்கள். (ஒ)



# இணைந்திருப்பதா? டிசெம்பருக்குள் முடிவு

கூட்டு அரசாங்கத்தில் இணைந்திருப்பதா இல்லையா என்பது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இன்னும் ஆறு மாதங்களுக்குள் முடிவெடுக்கப்படும் என்றும் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், " சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை மைத்திரிபால சிறிசேன ஏற்றுக்கொள்ளாமல் விட்டிருந்தால், அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்திருக்காது.
கூட்டு அரசாங்கம் உருவாக்கப்பட்டிருக்காவிட்டால், 2001-2004 காலப்பகுதியில் சந்திரிகா குமாரதுங்கவைப் போல, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தனிமைப்படுத்தப்பட்டிருப்பார்.
ஐதேகவின் பல தன்னிச்சையான முடிவுகளை, அரசாங்கத்தில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் முறியடித்துள்ளனர்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## எரிவாயு மின்திட்டம் இந்தியா–ஜப்பானுக்கு அழைப்பு

இலங்கையில் 500 மெகாவாட் திறன் கொண்ட இயற்கை எரிவாயு மின் திட்டங்களை அமைப்பதற்கு, ஜப்பான் மற்றும் இந்திய அரசாங்கங்களுக்குக் கடிதங்களை அனுப்புவதற்கு இலங்கை அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. அமைச்சர்கள் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் இணைந்து இந்தக் கடிதங்களுக்கு அனுமதி கோரும் பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தனர். ஜப்பான்- இந்திய கூட்டு முயற்சியாக, 500 மெகாவாட் மின் திட்டத்துடன் இணைந்ததாக, 250 மில்லியன் டொலர் செலவில் மிதக்கும் இயற்கை எரிவாயு முனையம், மற்றும் எரிவாயு விநியோகக் குழாய் என்பன அமைக்கப்படவுள்ளன.
கரவெலப்பிட்டியில் அமைக்கப்படவுள்ள இந்த மின் நிலையத்தை,அமைக்கும் பணியில் இந்தியாவின் தரப்பில் பெட்ரோநெற் என்ற நிறுவனம் ஈடுபடவுள்ளது. (உ)

## இன்றைய கருத்தோவியம்



நன்றி - அவந்த ஆட்டிக்கல

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாடி வீட்டுத்திட்டம்

சமீபத்திய இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் விருப்பத்துக்கு அமைவாக உயரமற்ற மாடிவீட்டுத்திட்ட மொன்றை பரீட்சார்த்தமாக மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.
இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கையில், மழை மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அனர்த்த வலயங்களில் வாழும் மக்களின் விருப்பத்துக்கு அமைவாக அவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உயரமற்ற மாடிவீட்டு முறையொன்றை பரீட்சார்த்தமாக மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.
இதற்கான ஆலோசனைகளை அதிகாரிகளுக்கு தெரிவித்திருப்பதாகவும் அவர் கூறினார். (உ)

# மைத்திரி முன்னுதாரணம் பங்களாதேஷ் புகழாரம்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது இலங்கையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார் .
அனுபவமிக்க தலைவரான இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ஒட்டுமொத்த அரச தலைவர்களுக்கும் பெருமைமிகு முன்னுதாரணம் என்றும் பங்களாதேஷ் சபாநாயகர் தெரிவித்துள்ளார். பங்களாதேஷுக்கு மூன்று நாள் அரச முறை விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பங்களாதேஷ் சபாநாயகர் செரைன் சர்மின் சயுடிகர் அம்மையாருக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் டாக்கா நகரில் இடம்பெற்ற சந்திப்பின்போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இரு நாட்டின் நாடாளுமன்றங்களுக்கிடையிலான தொடர்புகளை மேம்படுத்தல் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், இரு நாடுகளினதும் நாடாளுமன்ற நடைமுறைகள் பற்றிய அனுபவங்களைப் பரிமாறிக்கொள்வதற்கான புதிய செயற்றிட்டம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (உ)

## மக்கள் உரிமைகள் விரிவுபடுத்தப்படும்



தகவல் அறியும் சட்டத்தின் மூலம் பொதுமக்களின் உரிமைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். மேலும் சில வருடங்களில் இதன் பயன்களை நாடு பெற்றுக்கொள்ளும். சுயாதீன ஆணைக்குழு தற்பொழுது செயற்படுகிறது. கடந்த காலங்களில் இது வெறும் கனவாகவே இருந்து வந்தது என்றும் அவர் கூறினார். சமகால அரசாங்கத்தின் கீழ் எந்த வகையிலும் ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. தற்போது அதிகாரத்தில் உள்ளோர் ஊடக சுதந்திரத்துக்காக பெரும் அர்ப்பணிப்பை மேற்கொண்டவர்களாவர் என்று சபாநாயகர் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.நாட்டில் நிலவும் தற்போதைய நிலைமையில் ஊடக ஒடுக்கு முறைக்கு எந்தவித இடமும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (உ)

# நீலத் திமிங்கலம் போர்ப் பயிற்சி



இலங்கைக் கடற்படையின் மரைன் பட்டாலியன், 'நீலத் திமிங்கலம்-3' என்ற போர்ப் பயிற்சியை திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாய் கடற்கரைப் பகுதியில் நடத்தியுள்ளது. ஈருடகப் பயிற்சியுடன் இந்த 'நீலத் திமிங்கலம் -3' பயிற்சிகள் நேற்றுமுன்தினம் நிறைவடைந்தன.
கடற்படையின் மரைன் படைப் பிரிவின் 2ஆவது பட்டாலியனைச் சேர்ந்த 159 படையினர் இந்தப் பயிற்சியில் பங்கேற்றனர்.
கடல், தரை வழியாக வரக்கூடிய எத்தகைய அச்சுறுத்தலையும் எதிர்கொள்வதற்கேற்ற தயார் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்தப் பயிற்சி முன்னெடுக்கப்பட்டது.
இந்தப் பயிற்சியில் கடற்படையின் 821 ஆவது இலக்க தரையிறக்க கப்பல், 4 அதிவேக தாக்குதல் படகுகள், ஒரு அதிவேக பீரங்கிப் படகு, 8 கரையோர ரோந்துப் படகுகள், மற்றும் விமானப்படையின் ஒரு எவ்-7 போர் விமானம் மற்றும் எம்.ஐ-17 உலங்குவானூர்திகள் என்பன ஈடுபட்டன. (உ)

# போதைக்கு எதிராக ஊர்வலம்



ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புகள் ஊடாக போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலமும் வீதிநாடகமும் நேற்று நடைபெற்றன.
'சிறுவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு விரைவில் அடிமையாகக்கூடியவர்கள் அவர்கள் தொடர்பில் விழிப்பாக இருப்போம்' எனும் தொனிப்பொருளின் விழிப்புணர்வு ஊர்வலம் செங்கலடி நகரில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன் தலைமையில் நடைபெற்றது. (உ)

# நந்திக்கடல் சேற்றை அகற்றி ஆழமாக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு நந்திக்கடலில் ஏற்பட்டுள்ள நீர் மட்டக் குறைவு காரணமாக 4,800 இற்கு மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்துள்ளார். "முல்லைத்தீவின் முத்தையன்கட்டுக்குளம் உட்பட காட்டாற்று வெள்ளம் நந்திக் கடல் ஊடாகவே பெருங்கடலில் கலக்கின்றது. கடந்த முப்பது ஆண்டுகளாக போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட மண் அரண்கள் மற்றும் நீரோட்டத்தினால் கொண்டு வரப்பட்ட மண் அனைத்தும் நந்திக் கடலை நிரப்பி உள்ளது. இந்நிலையிலேயே கடந்த ஏழு ஆண்டுகளாக நந்திக் கடலினை ஆழமாக்குங்கள் என முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டது. மீன்பிடியில் ஈடுபடுவதில் நெருக்கடி உள்ளது. நீர் மட்டம் குறைவாக இருப்பதன் காரணமாக கடல் உயிரினங்களின் பெருக்கம் குறைந்துள்ளது. எனவே, நந்திக் கடலில் இருந்து சேற்றினை அகற்றி ஆழமாக்கவும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றோம். ஆனால், இதுவரை அப்பணி தொடங்கப்படவில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு
விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)

வேதனம்: 15,000 + ஊக்கப்படி

தொடர்புக்கு:
021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com



## நாளை நாளும் கோளும்

16.07.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 32ஆம் நாள்

சப்தமி மு.ப. 10.22 வரை | ரேவதி மு.இ. 09.40 வரை | அமிர்தயோகம்

இராகுகாலம் 04.30-06.00 | சுபநேரம் 09.00-10.30 | எமகண்டம் 12.00-01.30

நாயன்மார்கட்டு ராஜேஸ்வரி அம்மன் கொடியேற்றம்

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜெயம் | சாந்தம் | மகிழ்ச்சி | அனுகூலம் | ஆர்வம் | கீர்த்தி | முயற்சி | ஓய்வு | ஈகை | நன்மை | பெருமை | உயர்வு |

எதிரொலி
Ethiroli

# பரிசுத் தினம்



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் பரிசுத்தினம் இன்று காலை 9மணியளவில் கல்லூரி அதிபர் சிறீதரன் பாலராணி தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவிகளுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். (உ–11)

# மீளாய்வுக் கூட்டம்



வடமாகாண சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டின் அரையாண்டிற்கான முன்னேற்றக் கூட்டம் இன்றைய தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9 மணி முதல் நண்பகல் வரை இடம்பெற்ற இந்த மீளாய்வு கூட்டத்தில் வடமாகாணத்தில் உள்ள 9 நீதிவான் நீதிமன்றங்களில் இயங்கி வரும் சமுதாய சீர்திருத்த திணைக்களத்தின் உத்தியோகஸ்தர்கள் வேலை பரிசோதகர்கள் கலந்துகொண்டிருந்தனர். (உ–04)

# அளவெட்டி கரப்பந்தாட்டம்: புத்தூர் கலைமதி வெற்றி



அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் 2:0 என்ற சுற்றுக்கணக்கில் அச்சுவேலி ஸ்டார் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தியது. ஆட்டத்தின் நாயகனாக கலைமதி வீரரான வாகீசன் தெரிவுசெய்யப்பட்டார். (ஐ)

# இலங்கை நிதானம்

இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டம் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெறுகின்றது.

இந்த ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 356 ஓட்டங்களைப் பெற்றது. கிரேக் எர்வின் அதிகபட்சமாக 160 ஓட்டங்களைப் பெற்றார்.பந்துவீச்சில் ரங்கன ஹேரத் 116 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளைக் கைப்பற்றி இருந்தார்.

தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி இன்று மதிய நேர உணவு இடைவேளை வரை இலக்கு இழப்பின்றி 77 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தரங்க 53 ஓட்டங்களுடனும், கருணாரத்னே 23 ஓட்டங்களுடனுடம் களத்தில் இருந்தனர். (ஆ)

**அமைச்சருக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

என்றும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் யுத்தம் முடிவுற்ற பின்னர் தொழிலுக்காக தென்னிலங்கை மீனவர்கள் அங்கு வருவது அதிகரித்துள்ளது. கொக்கிளாய், நாயாறு மற்றும் சாளை போன்ற பகுதிகளில் அதிகளவான தென்னிலங்கை மீனவர்கள் வருகைதந்து சட்டவிரோதமான மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளரும் உடந்தையாக இருக்கின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)


**அடுத்த.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

என்ற அச்சம் இந்தத் தேசிய அரசுக்கு இருக்கின்றது. அதன் காரணமாக இப்போதிலிருந்தே அவரை அடக்கி ஒடுக்குவதற்கு தேசிய அரசு திட்டமிடுகின்றது. அவரைக் கைது செய்து சிறையிலடைப்பதற்குச் சதி செய்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

**முறைப்பாடு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மீறப்பட்டுள்ளதாக முறைப்பாடு பதிவு செய்யசென்றபோதே பொலிசார் முறைப்பாட்டை ஏற்க மறுத்ததோடு எதுவாயினும் நீதிமன்றில் கதைத்துக்கொள்ளும் எனக் கூறியுள்ளனர். அதேவேளை முறைப்பாடு செய்ய விரும்பின் மனித உரிமை ஆணைக்குழுவிடமோ அல்லது யாழ். பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரிடமோ முறைப்பாடு செய்யுமாறு கூறி முறைப்பாட்டாளரை கோப்பாய் பொலிஸார் திருப்பி அனுப்பி உள்ளனர். (எ)

# அந்த நாள் ஞாபகம்.....!



**1815.07.15**

மாவீரன் நெப்போலியன் பொனபார்ட், தன்னுடைய இறுதிப் போரில் வாட்டர்லூவில் தோல்வியுற்று தலைமறைவாக இருந்தான். பின்னர் பெலெரொபோன் என்ற கப்பலில் கண்டுபிடிக்கப்பட்டு, அதன் கப்டனிடம் இதேநாளில் சரணடைந்தான்.

**பொலிஸ்.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

திணைக்களம் அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொலைச் சம்பவத்தின் முக்கியஸ்தரான சுவிஸ் குமார் என்பவர் தப்பிச் செல்வதற்கு உதவியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (எ)

**முன்பள்ளி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

யரங்கில் இன்று நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், றோட்டறிக் கழக உறுப்பினர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்தக் கற்கை நெறி ஆறுதல் நிறுவனத்தில் றோட்டறிக் கழகத்தின் நிதியுதவியுடன் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மட்டுவில் வளர்மதியின் கரப்பந்தாட்டம்: பாரதி, இந்து இளைஞர் இறுதிக்குத் தகுதி





மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவினருக்கான அரையிறுதியாட்டங்களில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் மற்றும் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் என்பன வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றுள்ளன.

நேற்று இரவு நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'பி' அணியை எதிர்த்து சண்லிப்பாய் இந்து இளைஞர் அணி மோதியது. பரபரப்பான இந்த ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி, 3:2 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இதேவேளை நடைபெற்ற மற்றொரு அரையிறுதியாட்டத்தில், நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தோப்பு கலைமகள் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக்கழகம் 3:1 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக்கொண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதியாட்டத்தில் பாரதி அணி, சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணியை எதிர்கொள்கிறது.(ஐ-50)

# யங்ஹென்றிஸ் தொடர்: இறுதியில் ஐயனார், றோயல் மோதல்





யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் அருளாந்தம் ஞாபகார்த்த உதைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து ஊரேழு றோயல் அணி மோதுகின்றது,

இன்று காலை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில், சென்லூட்ஸ் அணியை எதிர்கொண்ட துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம், 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்குத் தகுதியானது.

பின்னர் நடைபெற்ற மற்றொரு அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் அணி, பலாலி விண்மீன் அணியுடன் மோதியது.

இந்த ஆட்டத்தில் 2:1 எனற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றி பெற்று இறதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறும் இறுதியாட்டத்தில் றோயல் அணி, ஐயனார் அணியை எதிர்த்துக் களமிறங்குகிறது. (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 15.07.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.